Australian Government

Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள்: (Product Emissions Standards): சுங்கத் தரகர்களுக்கான முக்கியத் தகவல்



## உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?

வெளிப்புற மின் சாதனங்களில் (லான் மூவர்கள், செயின்சாக்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் போன்றவை) புதிய சிறு ஸ்பார்க்-இக்னிஷன் எந்திரங்களுக்கும் ஸ்பார்க்-இக்னிஷன் கடல்சார் எந்திரங்களுக்கும் புகை உமிழ்வுச் செந்தரங்களை ஆஸ்திரேலிய அரசு அறிமுகம் செய்துள்ளது.

புகை உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்யும் தயாரிப்புகள் மட்டுமே ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட முடியும்.

1 ஜூலை 2020 முதல் புகை உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்யும் தயாரிப்புகள் மட்டுமே ஆஸ்திரேலியாவில் வழங்க முடியும். இந்த தேதியிலிருந்து, ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஐரோப்பிய சான்று பெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் யூரோ ஸ்டேஜ் V செந்தரங்களுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

யூரோ ஸ்டேஜ் II உமிழ்வுத் தரங்களின்படி சான்றுபெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் வரும் 30 ஜூன் 2021-வரை ஆஸ்திரேலியாவிற்கு தொடர்ந்து வழங்கலாம், அதற்குப் பிறகு, யூரோ ஸ்டேஜ் V சான்று பெற்ற தயாரிப்புகளை மட்டுமே வழங்க முடியும்.

செந்தரங்களினால் கட்டுப்படுத்தப்படும் தயாரிப்புகள் கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகள் (emissions-controlled products) என அழைக்கப்படுகின்றன. கீழ்க்காணும் சர்வதேச ஆணையங்களுள் ஒன்றினால் சான்றுபெற்ற எந்திரங்கள் பொருத்தப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகள் எம்முடைய செந்தரங்களுக்கு உட்பட்டவையாகக் கருதப்படுகின்றன:

- அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency)
- கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board)
- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் கனடா (Environment and Climate Change Canada)
- ஒரு ஐரோப்பிய ஒன்றிய ஒப்புதல் ஆணையம்.

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச செந்தரங்களுள் ஒன்றினால் உங்களுடைய வாடிக்கையாளரின் தயாரிப்பு சான்று பெறாதிருந்தால், அவர்கள், அல்லது உண்மையில் அதன் தயாரிப்பாளர் ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக அல்லது ஒரு விதிவிலக்குக்காக விண்ணப்பிக்கலாம். குறிப்பிட்ட சூழல்களில் மட்டுமே செந்தரங்களுக்கு உட்படுவதிலிருந்து விதிவிலக்கு கிடைக்கும்.

துறையின் ஆன்லைன் சர்விசஸ் பிளாட்ஃபார்ம் வழியாக சான்றளிப்புக்கு மற்றும் விதிவிலக்குக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்.

கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளுக்கான தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-ன்கீழ் வரும் குற்றங்கள் இறக்குமதி, வழங்கல், அடையாளச்சீட்டு மற்றும் பதிவேடு பராமரிப்பு சார்ந்தவையாக இருக்கும். புகை உமிழ்வுச் செந்தரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் பொறுப்பு, இறக்குமதியாளர்களுக்கும் வழங்குநர்களுக்கும் உள்ளது.

இந்தத் தயாரிப்புகளோடு சம்பந்தப்பட்ட சுங்கவரி குறியீடுகள் ஒரு சமூகப் பாதுகாப்புக் கேள்வியைத் தூண்டும். ஒரு சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண் உள்ளிடப்பட வேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஆஸ்திரேலியாவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளுக்கு ஒரு தீர்வை பொருந்தும். இது வருடாந்திர முறையில் இறக்குமதியாளரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தயாரிப்புகள் மற்றும் சுங்கவரி குறியீடுகளுள்ள ஒரு உண்மையான பட்டியலைப் பார்க்க வேண்டிய வலைதளம் www.environment.gov.au/protection/emissions-standards

## நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுடைய வாடிக்கையாளர் கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளை இறக்குமதி செய்தால், அவர்கள் உங்களிடம் ஒரு சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண்ணைக் கொடுப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

சுங்கவரிக் குறியீடுகளில் ஒன்றுடன் இணைந்துள்ள சமூகப் பாதுகாப்புக் கேள்விக்குப் பதிலளித்து சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண்ணை உள்ளிடுங்கள்.

கூடுதல் தகவலுக்கோ அல்லது தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் பற்றியோ பயிற்சி வாய்ப்புகள் பற்றியோ மேலும் தெரிந்துகொள்ள நீங்கள் பார்க்க வேண்டிய முகவரி www.environment.gov.au/protection/emissions-standards அல்லது எங்களுக்கு எழுத வேண்டிய மின்னஞ்சல் முகவரி productemissions@awe.gov.au

கூடுதல் தகவல்கள்

- சுங்கத் தரகர்கள்.



ENV306.0420